بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 40

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

03 சஃபர் 1441 ஹிஜ்ரி கமரி 03 அஹா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி

03 அக்டோபர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِیۡنَ اِذَا فَعَلُوۡا فَاحِشَۃً اَوۡ ظَلَمُوۡۤا اَنۡفُسَہُمۡ ذَکَرُوا اللّٰہَ فَاسۡتَغۡفَرُوۡا لِذُنُوۡبِہِمۡ ۪ وَمَنۡ یَّغۡفِرُ الذُّنُوۡبَ اِلَّا اللّٰہُ ۪۟ وَلَمۡ یُصِرُّوۡا عَلٰی مَا فَعَلُوۡا وَہُمۡ یَعۡلَمُوۡنَ ۝

ஆம், இத்தகையோர் ஏதாவதொரு தீய செயலைச் செய்து விட்டாலோ, தமக்குத்தானே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவு கூர்ந்து தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புக் கோருகின்றனர். அல்லாஹ்வையன்றி எவரால் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும் அவர்கள் (தாம்) செய்து விட்டதனைப் பற்றி அறிந்து கொண்டே அடம்பிடிப்பதில்லை. (3:136)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## இறைவனின் செயல்கள் எண்ணற்றவையாகும். எல்லாம் வல்ல இறைவனின் வல்லமை ஒருபோதும் ஆதரவற்றதாக இருந்ததில்லை. மேலும் அவன் ஒருபோதும் சோர்வு அடைவதில்லை

**وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيمٌ மற்றும் اَفَعَيِيْنَا بِالْخَلْقِ الْاَوَّلِ ஆகியவை அவனின் மகத்துவமாகும்**

**எல்லாம் வல்ல அல்லாஹ்வின் எண்ணற்ற வல்லமைகள் மற்றும் செயல்களை எப்படிப்பட்ட அறிவாற்றல் உடையவராலும் ஞானம் உடையவராலும் கணக்கிட முடியாது. மாறாக, அப்படிப்பட்டவர் மனம் தளர்ந்து தோல்வியையே வெளிப்படுத்த வேண்டியது வரும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

பாருங்கள்! இறைவன் மனிதனை விந்திலிருந்து படைத்துள்ளான். இந்த வார்த்தையை கூறுவது மிகவும் எளிதாகும். மேலும் இது ஒரு சாதாரண விஷயமாக கருதப்படுகிறது. இதிலுள்ள ஒரு இரகசியம் என்னவென்றால், சிறுநீரினாலான விந்துத் துளியிலிருந்து மனிதனைப் படைத்து அவனில் எண்ணற்ற ஆற்றலை ஏற்படுத்தியுள்ளான். அவனுடைய நிலை மற்றும் ஆழம் வரை எந்த ஒரு அறிவின் சக்தியாலும் சென்றடைய முடியாது.

புவியியலாளர்கள் மற்றும் தத்துவஞானிகள் மிகவும் அழுத்தம் கொடுத்து முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் அவர்களால் அதனுடைய மூலப்பொருள் வரை சென்றடைய முடியவில்லை.

ஆக இது போன்று ஒவ்வொரு அணுவும் எல்லாம் வல்ல இறைவனின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று இவ்வுலக அமைப்பிலும், வழக்கத்திற்கு மாற்றமான ஒரு விஷயம் வெளிப்பட வேண்டும் என்பதில் அல்லாஹ் ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றான். அறிவாற்றல் உடையவர்கள் அந்த நிலைமைகளை நன்கு புரிந்தவாறு அதிலிருந்து மனநிறைவு அடைகின்றனர். ஒருசிலர் சின்னஞ்சிறு மற்றும் ஒன்றும் அல்லாத விஷயங்களின் மீது ஆட்சேபனை செய்தவாறு ஐயம் கொள்கின்றனர்.

உதாரணமாக, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பு எரிக்கவில்லை என்று கூறுகின்றனர். இந்த நிகழ்வு (ஷக்குல் கமர்) சந்திரன் பிளத்தல் தொடர்பானது போன்றே ஆகும். நெருப்பைத் தணிக்கக்கூடிய காரணிகள் உருவாகும் வரை நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும் என்பதை இறைவன் நன்கு அறிவான். அப்படிப்பட்ட காரணிகள் வெளிப்பட்டாலோ அல்லது கூறப்பட்டாலோ உடனடியாக ஏற்றுக் கொள்வார்களா?

அப்படிப்பட்ட நிலையில் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளுதல் மற்றும் நல்ல எண்ணத்தின் நம்பகத்தன்மையின் சிறப்பம்சம் எவ்வாறு வெளிப்படும். இறைவன் காரணிகளைப் படைப்பதில்லை என்று ஒருபோதும் கூறவில்லை. மாறாக சில காரணிகள் வெளிப்படையாக நம்மால் பார்க்க முடியும். சில காரணிகளைப் பார்க்க முடியாது. ஆக இறைவனின் செயல்கள் எண்ணற்றதாகும். எல்லாம் வல்ல இறைவனின் வல்லமை ஒருபோதும் ஆதரவற்றதாக இருந்ததில்லை. மேலும் அவன் ஒருபோதும் சோர்வு அடைவதில்லை.

وَ هُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيمٌ

படைக்கப்பட்ட ஒவ்வொன்றி(ன் நிலையி)னைப் பற்றியும் அவன் நன்கு அறிவான். (திருக்குர்ஆன் 36:80)

اَفَعَيِيْنَا بِالْخَلْقِ الْاَوَّلِ

முதன்முறை படைப்பினால் நாம் களைப்படைந்து விட்டோமா? (திருக்குர்ஆன் 50:16)

இதுவே அவனின் மகத்துவம் ஆகும். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் எண்ணற்ற வல்லமைகள் மற்றும் செயல்களை எப்படிப்பட்ட அறிவாற்றல் உடையவராலும் ஞானம் உடையவராலும் கணக்கிட முடியாது. மாறாக, அப்படிப்பட்டவர் மனம் தளர்ந்து தோல்வியையே வெளிப்படுத்த வேண்டியது வரும்.

எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. அப்துல் கரீம் என்ற பெயரைக் கொண்ட ஒரு நபர் என்னிடம் வந்தார். அவரது உடலில் ஒரு கட்டி இருந்தது. அந்த கட்டி மலத் துவாரத்தை நோக்கி வளர்ந்து கொண்டே சென்றது. மருத்துவர்கள் அவரிடம் அதற்கு எந்த சிகிச்சையும் இல்லை என கூறி மேலும் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும் எனக் கூறினார்கள். ஆக எண்ணற்ற இவ்வறான நோய்கள் இக்கின்றன. அதற்கான மூலக் காரணத்தை மருத்துவர்களாலேயே அறிய முடியவில்லை.

உதாரணமாக, பிளேக் மற்றும் காலரா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவர்களை சேவை செய்வதற்காக நியமித்தால் அவர்களுக்கு சுயமே வயிற்றுப்போக்கு ஏற்பட்டு

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஸ்ஹாபே ஸுஃப்ஃபாவைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எத்தகைய நேசம் வைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை விட்டு விலகிச் செல்ல விரும்பவில்லை**

**இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ்வின் ரஸூலின் வீட்டில் ஒன்று அல்லது இரண்டு மாதங்களாக அடுப்பு எரியவில்லை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கிடையில் அமர்ந்து கொண்டார்கள். பின்னர் தங்களையும் எங்களது கூட்டத்தைச் சார்ந்தரவராக சைகை செய்து காட்டினார்கள். தனது அருளுக்குரிய கரங்களால் சைகை செய்தார்கள். அதாவது நானும் உங்களில் ஒருவன் ஆவேன். உங்களுக்கு மத்தியில் அமர்ந்திருக்கின்றேன் என்று கூறி ஒரு வட்டத்தை உருவாக்கி சைகை செய்து காட்டினார்கள்**

**ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது (ரலி) அவர்களின் நற்குறிப்பில் அஸ்ஹாபே ஸுஃப்ஃபாவைச் சேர்ந்தவர்கள் செய்த தியாகங்கள் மற்றும் அவர்களது அந்தஸ்து தொடர்பாகவும், ஹஸ்ரத் உபாதா பின் சாமித் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றிகள் குறித்தும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்**

**கிலாஃபத்திற்கான தன்மான உணர்வை வெளிப்படுத்திய, மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கிய, அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருந்த, கவிஞரும், இலக்கியவாதியும், தைரியமிக்க அஹ்மதியுமான மதிப்பிற்குரிய தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களின் மரணத்தின்போது ஹுஸூர் அவர்கள் அவர்களது நற்குறிப்பை எடுத்துக் கூறியவாறு ஜனாஸா தொழுகையையும் தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 30 ஆகஸ்ட் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஸஹூர்** மாதம் **30 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ரி சஹாபாக்களின் நற்குறிப்பில் இன்று நான் முதலில் ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அஸ்லி (ரலி) என்ற பெயருடைய சஹாபியைப் பற்றி கூறுவேன். ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அவர்களின் சுட்டுப் பெயர் அபூ அப்தில்லாஹ் ஆகும். அன்னார் பனூ ஹுஸைல் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 563 உத்பா பின் மஸ்ஊது – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தந்தையார் பெயர் மஸ்ஊது பின் காஃபில் ஆகும். அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே அப்தே பின்த் அபதவ்வத் ஆகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது அவர்கள் அன்னாரின் சகோதரர் ஆவார்கள். அன்னார் மக்காவில் ஆரம்ப காலகட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அபிஸீனியாவை நோக்கி இரண்டாம் முறை ஹிஜ்ரத் செய்யக் கூடியவர்களில் அன்னாரும் அடங்குவார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 381 உத்பா பின் மஸ்ஊது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அரபிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அவர்கள் அஸ்ஹாபே ஸுஃப்பைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் லில்ஹாகிம் தொகுதி 5 பக்கம் 1645 ஹதீஸ் எண் 4294 – 1995 ஆம் ஆண்டு மக்காவில் அச்சிடப்பட்டது)

ஸுஃப்பாவைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் பல்வேறு வரலாற்று குறிப்புகளிலிருந்து எழுதியுள்ளார்கள்.

அன்னார் எழுதுகின்றார்கள்: பள்ளிவாசலின் ஒரு மூலையில் மேற்கூரை கொண்ட ஒரு திண்ணை ஒன்று கட்டப்பட்டது. அதனை ஸுஃப்பா என்று கூறுவார்கள். வீடு இல்லாத ஏழை முஹாஜிரீன்களுக்காக அது கட்டப்பட்டிருந்தது. அவர்களுக்கென்று எந்தவொரு வீடும் இல்லாமல் இருந்தது. அம்மக்கள் அங்கேயே வாழ்ந்து வந்தனர். அவர்கள் அஸ்ஹாபே ஸுஃப்பா என்று அழைக்கப்பட்டார்கள். இரவும் பகலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் இருப்பதும், இறைவணக்கம் செய்வதும், திருக்குர்ஆன் ஓதுவதும் அவர்களின் பணியாக இருந்து வந்தது.

அவர்களுக்கென்று நிரந்தரமான வருமானம் எதுவும் இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் அவர்களை கருத்தில் கொண்டு வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவதொரு அன்பளிப்பு வந்தாலோ அல்லது அன்னாரின் வீட்டில் ஏதாவது இருந்தாலோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதில் அந்த மக்களுக்கும் நிச்சயம் ஒரு பங்கை ஒதுக்கி விடுவார்கள்.

இன்னும் கூறப்போனால், சில நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் பட்டினியாக இருந்தார்கள். வீட்டில் எது இருந்ததோ அதனை அஸ்ஹாபே ஸுஃப்பாவிற்கு அனுப்பி வைத்து விடுவார்கள். அன்ஸார் சஹாபாக்களும் முடிந்த வரை இவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வதில் மும்முரமாக இருந்தார்கள். அவர்களுக்காக பேரீத்தம் பழங்களின் கிளைகளை பள்ளிவாசலுக்கு கொண்டு வந்து தொங்க விட்டு விடுவார்கள்.

ஆயினும், இதன் பிறகும் அவர்களின் நிலை மிக ஏழ்மையான நிலையாக இருந்து வந்தது. மேலும் சில முறை பட்டினியாகவும் இருக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலை பல ஆண்டுகள் வரை தொடர்ந்தது. எந்த அளவுக்கு என்றால் ஓரளவிற்கு மதீனாவின் மக்கள் தொகை அதிகரித்ததன் விளைவாக அம்மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்து வந்தன. ஏதாவது ஒரு வேலை வாய்ப்பு கிடைத்து வந்தது. ஓரளவிற்கு சமூதாய பைத்துல் மால் அமைப்பிடமிருந்தும் உதவி என்ற வடிவில் அவர்களுக்கு கிடைத்து வந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 270)

எவ்வாறிருப்பினும் இந்த மக்கள் தொடர்பாக மற்றும் ஓரிடத்தில் மேலும் விளக்கம் உள்ளது. இம்மக்கள் பகலில் நபியின் சபையில் கலந்து கொண்டு ஹதீஸ்களை கேட்டு வந்தனர். இரவில் ஒரு திண்னையில் கழித்து வந்தனர். அரபி மொழியில் திண்ணைக்கு ஸுஃப்பா என்று கூறுவார்கள். இதன் அடிப்படையிலேயே அந்த சான்றோர்கள் திண்ணைத் தோழர்கள் (அஸ்ஹாபே ஸுஃப்) என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களில் எவரிடமும் போர்வையும், தலைப் பாகையும் இரண்டும் ஒருசேர ஒருபோதும் இருந்ததில்லை. போர்வையை கழுத்திலிருந்து தொடை வரை தொங்கும் அளவில் போர்த்திக் கொள்வார்கள். அவர்களிடத்தில் முழுமையான ஆடைகள் இருந்ததில்லை. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இந்த சான்றோர்களில் ஒருவராக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் அஹ்லே ஸுஃப்பா கூட்டத்தினரில் 70 நபர்களை இவ்வாறு கண்டேன். அதாவது அவர்களின் ஆடைகள் தொடை வரை கூட முழுமையாக சென்றடைவதில்லை. உடலில் ஆடையைப் போர்த்தி இருந்தார்கள். மணிக்கட்டுக்கு மேலே மிகக் கஷ்டப்பட்டுத்தான் ஆடை சென்று சேர்ந்தது.

மேலும் கூறுகின்றார்கள்: அவர்களில் ஒரு குழுவினர் பகலில் காட்டிற்குச் சென்று விறகுகளைப் எடுத்துக் கொண்டு வந்து அதனை விற்று தமது சகோதரர்களுக்காக கொஞ்சம் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். இதுவே அவர்களின் வருமானத்திற்குரிய வழியாக இருந்தது. பெரும்பாலும் அன்ஸார் சஹாபாக்கள் பேரீத்தம் பழங்களின் கிளைகளைக் கொண்டு வந்து பள்ளிவாசலின் கூரையில் தொங்க விட்டு விடுவார்கள்.

வெளியூரிலிருந்து வரும் மக்கள் இவர்களைப் பார்த்து இவர்கள் பைத்தியக்காரர்கள் என கருதிக் கொள்வார்கள். இவர்கள் இங்கு வீணாக அமர்ந்திருக்கின்றார்கள். இவர்கள் முட்டாள்கள் என்றும் வெளியூர்வாசிகள் எண்ணி வந்தனர். அவர்கள் எப்படிப்பட்ட பைத்தியக்காரர்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டை விட்டு விலகிச் சென்று விட முடியாத மக்களாக இருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சதகா கொண்டு வரப்பட்டால் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். விருந்திற்கான உணவு கொண்டு வரப்பட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை அழைத்து தம்முடன் அமர்த்தி உணவு உண்பார்கள். பெரும்பாலும் இரவுகளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ஏழை முஹாஜிரீன்களை மற்ற அன்ஸார்கள் மற்றும் முஹாஜிரீன்களிடம் பிரித்து அனுப்பி வைத்து விடுவார்கள்.

அதாவது அவரவர் தகுதிக்கேற்ப ஒருவர் அல்லது இருவரை தம்முடன் அழைத்துச் சென்று அவர்களுக்கு இரவிற்கான உணவை வழங்க வேண்டும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள். சில முறை முஹாஜிரீன்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். சில முறை இரவிற்கான உணவை இவர்களுக்கு வழங்குமாறு அன்ஸார்களிடம் கூறி விடுவார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களை சில முறை வந்தன.

ஹஸ்ரத் சஅது பின் உபாதா மிகவும் செல்வந்தரான ஒரு சஹாபி ஆவார்கள். சில முறை 80, 80 விருந்தினர்களை தம்முடன் அழைத்துச் செல்வார்கள். 80 விருந்தினர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு சென்று அவர்களுக்கு இரவிற்கான உணவை வழங்குவார்கள். அந்த அளவிற்கு அவர்களுக்கு வசதி இருந்தது. பல்வேறு அறிவிப்புகளின் அடிப்படையில் அஹ்லே ஸுஃப்பாவின் எண்ணிக்கை பல்வேறு தருணங்களில் பல்வேறு தரப்பட்டதாக இருந்து வந்தது.

குறைந்தபட்சம் 12 நபர்கள் என்றும், அதிகபட்சமாக 300 உறுப்பினர்கள் ஒருநேரத்தில் ஸுஃப்பா என்ற இடத்தில் வசித்து வந்தனர் கூறப்படுகின்றது. இன்னும் கூறுவதென்றால், இவர்களின் மொத்த எண்ணிக்கை 600 சஹாபாக்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவர்கள் மீது அதிக அன்பு இருந்தது. அவர்களுடன் பள்ளிவாசலில் அமர்ந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து உணவு உண்பார்கள்.

அவர்களை மதிக்கும்படியும், கண்ணியமளிக்கும்படியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். அம்மக்கள் வேலையின்றி சும்மா அமர்ந்திருக்கின்றார்கள். எனவே அவர்களை மதிக்கவோ, கண்ணிப்படுத்தவோ வேண்டாம் என்ற எண்ணம் தோன்றிவிடாத அளவிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருத்தில் கொண்டு செயல்பட்டார்கள்.

இன்னும் சொல்வதென்றால், இம்மக்கள் எனது கூற்றை கேட்பதற்காக இங்கு அமர்ந்திருக்கின்றார்கள். எனவே அவர்களில் ஒவ்வொருவருக்கும் உரிய மதிப்பும், மரியாதையும் கொடுக்க வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களுக்கு கூறி வந்தார்கள்.

ஒரு முறை அஹ்லே ஸுஃப்பாவைச் சார்ந்த ஒரு குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்று முறையிட்டார்கள். பேரீத்தம் பழங்கள் எங்களது வயிற்றை எரித்து விட்டன. பேரீத்தம் பழங்களே எங்களுக்கு உண்ணக் கிடைக்கின்றன. அதைத் தவிர்த்து வேறு எதுவும் எங்களுக்கு கிடைப்பதில்லை என்று முறையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் புகாரை செவிமடுத்தார்கள். பின்னர் அவர்களின் உள்ளத்தை ஆறுதல்படுத்துவதற்காக சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள்.

அதில் அன்னார் கூறினார்கள்: எங்களது வயிற்றை பேரீத்தம் பழங்கள் எரித்து விட்டன என்று நீங்கள் கூறுகின்றீர்கள். பேரீத்தம் பழங்கள்தான் மதீனாவாசிகளின் உணவாகும் என்பது உங்களுக்குத் தெரியாதா? மக்கள் இந்த பேரீத்தம் பழங்களின் மூலமாகத்தான் நமக்கு உதவி செய்கின்றார்கள். நாமும் அதன் மூலமாகவே உங்களுக்கு உதவி செய்கின்றோம் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! ஒன்று அல்லது இரண்டு மாதமாக அல்லாஹ்வின் தூதரின் வீட்டில் அடுப்பு எரியவில்லை. அதாவது நானும் எனது குடும்பத்தினரும் வெறும் தண்ணீரைக் கொண்டும், பேரீத்தம் பழங்களைக் கொண்டும் நாட்களைக் கழித்துள்ளோம்.

எவ்வாறிருப்பினும் அஸ்ஹாபே ஸுஃப் விநோதமான நன்றியுணர்வு படைத்த மக்களாக இருந்தார்கள். அதாவது பேரீத்தம் பழங்களை உண்ணுகிறோம். அதனால் எங்களது வயிறு எரிந்து விடுகின்றது என்று புகார் செய்தார்கள்தான். ஆனால் அந்த இடத்தை விட்டு அகன்று விடவில்லை. முழுமையான நன்றியுணர்வுடன் அங்கேயே அவர்கள் அமர்ந்திருந்தார்கள். பசியின் போது பேரீத்தம் பழமோ அல்லது வேறு எதுவோ கிடைத்து விட்டாலும் அதை உண்டு வாழ்க்கையை கழித்து வந்தார்கள். மேலும் பொதுவாக இரவில் இறைவணக்கம் செய்து வந்தார்கள். திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். இதுவே அந்த சான்றோர்களின் பணியாக இருந்து

வந்தது என்று எழுதப்பட்டுள்ளது. அவர்களுக்காக ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர்களிடத்தில் இரவில் சென்று இவர்கள் ஓதி வந்தனர். எவர்களுக்கு ஓதத் தெரியாதோ அல்லது திருக்குர்ஆனை சரியாக படிக்க முடியாதவர்களாக எவர்கள் இருந்தார்களோ, அல்லது யார் திருக்குர்ஆனை மனனம் செய்ய விரும்பினார்களோ அவர்களுக்கு அந்த ஆசிரியர் இரவில் திருக்குர்ஆனை ஓதிக் கொடுத்து வந்தார்.

அதன் காரணமாக அவர்களில் பெரும்பான்மையினர் காரீ என்று அழைக்கப்பட்டு வந்தனர். இஸ்லாத்தைப் பரப்புவதற்கு எங்கேயாவது யாரையும் அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டால் இம்மக்களே அனுப்பப்பட்டு வந்தார்கள். இவர்கள் எழுதப்படிக்க கற்றுக் கொண்ட உடன் இவர்கள் காரீ என்று அழைக்கப்பட்டு வந்தனர். மற்றவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்காக இம்மக்கள் அனுப்பப்பட்டு வந்தார்கள். பிற்காலத்தில் இந்த சஹாபாக்களிலிருந்தே பலர் பெரும் பெரும் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். அதாவது அஸ்ஹாபே ஸுஃப்ப் அங்கேயே அமர்ந்திருந்தார்கள் என்பதல்ல. மாறாக, பெரும் பதவிகளில் அவர்கள் பணியமர்த்தப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பஹ்ரைன் நாட்டின் கவர்னராக நியமிக்கப்பட்டார்கள். பின்னர் முஆவிய்யாவின் காலகட்டத்தில் மதீனாவின் கவர்னராகவும் அன்னார் இருந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் அவர்கள் பஸ்ராவின் கவர்னராக இருந்தார்கள். மேலும் கூஃபா நகரத்தின் அடித்தளத்தை அன்னாரே அமைத்தார்கள். ஹஸ்ரத் சல்மான் ஃபாரிஸி அவர்கள் மதாயின் நகரத்து கவர்னராக இருந்ததுள்ளார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்கள் கூஃபா நகரத்தின் கவர்னராக இருந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் திண்ணைத் தோழர்களைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் உபாதா பின் ஜராஹ் பாலஸ்தீன் நாட்டின் கவர்னராக இருந்தார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் காலகட்டத்தில் மதீனாவின் கவர்னராக இருந்தார்கள். இவர்களில் ஒரு போர்த்தளபதி இருந்தார். அவர்கள் இஸ்லாமிய வெற்றிகளில் மிக முக்கிய பங்கு ஆற்றியுள்ளார். ஹஸ்ரத் ஸைது பின் சாபித் ஒரு போர்த்தளபதி மட்டுமல்ல. மாறாக, ஹஸ்ரத் உமர் அவர்களின் காலகட்டத்தில் காஸிவுல் கஸா என்ற முக்கிய பதவியையும் வகித்து வந்தார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 548–550 – 2004 ஆம் ஆண்டு கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ சயீது குத்ரி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஏழை முஹாஜிரீன்களின் கூட்டத்தில் சென்று அமர்ந்தேன். அதாவது அந்த திண்ணைத் தோழர்களின் கூட்டத்தில் அமர்ந்தேன். அவர்கள் அரை நிர்வாணத்தின் காரணமாக மறைந்து இருந்து வந்தார்கள். ஏறக்குறைய அவர்களின் பாதி உடல் நிர்வாணமாகவே இருந்தது. எந்த அளவுக்கு என்றால் மிகக்கடினமாக கஷ்டப்பட்டு தங்களது உடலை மறைத்து வந்தார்கள். எங்களில் ஒரு காரீ திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னார் வருகை தந்ததும் காரீ மௌனமாகி விட்டார்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சலாம் கூறினார்கள். மேலும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது நாங்கள் இந்த காரீ எங்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். நாங்கள் அல்லாஹ்வின் வேதத்தை செவிமடுத்துக் கொண்டு இருக்கின்றோம் என்று கூறினோம். எனது சமுதாயத்தில் இப்படிப்பட்ட மக்களை இறைவன் இணைத்திருக்கின்றான். அவர்களுடன் சேர்ந்து பொறுமையை மேற்கொள்ளும்படி எனக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது. எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது எவ்வாறு இவர்கள் பொறுமை செய்து கொண்டிருக்கின்றார்களோ நீரும் அதேபோன்று பொறுமை செய்யும் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பளார் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கிடையில் அமர்ந்து கொண்டார்கள். பின்னர் தங்களையும் எங்களது கூட்டத்தைச் சார்ந்தரவராக சைகை செய்து காட்டினார்கள். தனது அருளுக்குரிய கரங்களால் சைகை செய்தார்கள். அதாவது நானும் உங்களில் ஒருவன் ஆவேன். உங்களுக்கு மத்தியில் அமர்ந்திருக்கின்றேன் என்று கூறி ஒரு வட்டத்தை உருவாக்கி சைகை செய்து காட்டினார்கள். எனவே அனைவரின் கவனமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பக்கம் திரும்பியது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னைத் தவிர வேறு எவரையும் அடையாளம் காணவில்லை என்பது எனது எண்ணமாகும்.

மேலும் அறிவிப்பவர் கூறுகின்றார்: என்னைத் தவிர ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறு எவரையும் அடையாளம் காணவில்லை.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ள முஹாஜிரீன் கூட்டத்தினரே! உங்களுக்கு நற்செய்தி உள்ளது. நீங்கள் கியாமத் நாளன்று முழுமையான ஒளியுடன் செல்வந்தர்களை விட பாதி பகலுக்கு முன்பாகவே சுவர்க்கத்தில் நுழைந்து விடுவீர்கள். இந்த பாதி நாள் என்பது **500** வருடங்களைக் கொண்ட பகலாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் அபி தாவூது, கிதாபுல் இல்ம்... ஹதீஸ் எண் **3666**)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் இல்ஹாம் வந்துள்ளது. அதில் திண்ணைத் தோழர்கள் பற்றிய குறிப்பு உள்ளது. அது அரபி இல்ஹாமாகும்.

”اَصْحَابُ الصُّفَّةِ وَمَا اَدْرَاكَ مَا اَصْحَابُ الصُّفَّةِ تَرٰى اَعْيُنَهُمْ تَفِيْضُ مِنَ الدَّمْعِ۔
يُصَلُّوْنَ عَلَيْكَ۔ رَبَّنَا اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ وَدَاعِيًا اِلَى اللّٰهِ وَسِرَاجًا مُنِيْرًا۔

அதன் பொருள்: ஸுஃப்பா வாசிகளே! ஸுஃப்பா வாசிகளைப் பற்றி நீர் என்ன அறிவீர்? அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடுவதை நீர் காண்பீர். அவர்கள் உம்மீது சலவாத் ஓதுவார்கள். மேலும் எங்கள் இறைவா! ஈமானின் பக்கம் அழைக்கக்கூடிய நபரின் குரலை நாங்கள் செவிமடுத்தோம் என்று அவர்கள் கூறுவர்.

(ஹகீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 78)

எனக்கும் அதே போன்ற நபித்தோழர்கள் கிடைப்பார்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில சஹாபாக்களைப் பற்றி இறங்கிய இல்ஹாமாகும் இது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த இந்த திண்ணைத் தோழர்கள் மிகவும்

கண்ணியத்திற்குரிய மக்களாக இருந்தார்கள். மேலும் மிகவும் உறுதிவாய்ந்த ஈமான் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் வெளிப்படுத்திய கலப்பற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வின் முன்னுதாரணங்கள் பிறருக்கு படிப்பினையாகும். உமக்கும் அதுபோன்ற சில மக்கள் வழங்கப்படுவர் என்று அல்லாஹ் என்னிடமும் கூறியுள்ளான்.

சஹீஹ் புகாரியில் உத்பா பின் மஸ்ஊது அவர்களின் குறிப்பு பத்ர் போர் சஹாபாக்களின் பட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், சஹாபாக்களின் வாழ்க்கையை உள்ளடக்கிய சில புத்தகங்களான அஸதுல் காபா, ஃபீ மஃரிஃபத்துஸ் சஹாபா, அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா, தப்காத்துல் குபுரா போன்றவற்றுள் உஹது மற்றும் அதன் பிறகு நடைபெற்ற ஏனைய போர்களில் அன்னார் பங்கு பெற்றதாகவே குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 563 உத்பா பின் மஸ்ஊது – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபி தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 366 உத்பா பின் மஸ்ஊது – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 1030 உத்பா பின் மஸ்ஊது – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 381 உத்பா பின் மஸ்ஊது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஆனால் பத்ர் போரில் பங்கு பெற்றதாக குறிப்புகள் இல்லை. எனினும் இமாம் புகாரி அவர்கள் ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அவர்களின் குறிப்பை பத்ரி சஹாபாக்களின் குறிப்புகளிலேயே சேர்த்துள்ளார்கள். ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 23 வது ஆண்டில் மதீனாவில் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

காஸிம் பின் அப்துர் ரஹ்மான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது அவர்களின் ஜனாஸா தொழுகையின் போது அன்னாரின் தாயார் ஹஸ்ரத் உம்மே அப்து அவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னாருக்கு காத்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 4 பக்கம் 238 உத்பா பின் மஸ்ஊது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இமாம் ஸஹ்ரி அவர்களின் அறிவிப்பு என்னவென்றால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் தனது சகோதரரான ஹஸ்ரத் உத்பா (ரலி) அவர்களை விட ஹிஜ்ரத்தின் அடிப்படையில் மூத்தவராக இருந்திருக்கவில்லை. அதாவது ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் மிகவும் பழைய சஹாபியாக இருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் உத்பா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அன்னாரின் சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. நீங்கள் அழுகின்றீர்களா? என சில மக்கள் அன்னாரிடம் கேட்டனர். அதற்கு அன்னார், இவர் எனது சகோதரராக இருந்தார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் இவர் என்னுடைய தோழராக இருந்தார். மேலும் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைத் தவிர்த்து மக்களில் மற்றெல்லாரையும் விட எனக்கு மிகவும் நேசத்திற்குரியவராக இருந்தார்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 563 உத்பா பின் மஸ்ஊது – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மற்றுமொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது (ரலி) அவர்களின் மரண செய்தி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்களிடம் வந்தபோது அன்னாரின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

மேலும் அன்னார் கூறினார்கள்:

إِنَّ هٰذِهٖ رَحْمَةٌ جَعَلَهَا اللهُ لَا يَمْلِكُهَا ابْنُ اٰدَمَ அதாவது நிச்சயமாக இது அல்லாஹ் வழங்கிய கருணையாகும். ஆதமின் மகன் இதனை கட்டுப்பாட்டில் வைப்பதற்கு ஆற்றலற்றவர் ஆவார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 381,382 உத்பா பின் மஸ்ஊது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அதாவது மரணம் என்பது உண்மையாகும். அது நன்மக்களுக்கு கருணையாக ஆகி விடுகின்றது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உத்பா பின் மஸ்ஊது (ரலி) அவர்களை உள்ளூர் அமீராகவும் ஆக்கினார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 366 உத்பா பின் மஸ்ஊது – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி) என்ற அன்ஸாரி சஹாபியைப் பற்றி குறிப்பிட உள்ளேன். ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களின் தந்தையின் பெயர் சாமத் பின் கைஸ் ஆகும். தாயார் பெயர் குர்ரத்துல் அய்ன் பின்த் உபாதா ஆகும். பைஅத்தே உக்பா ஊலா மற்றும் சானியா ஆகியவற்றில் அன்னார் கலந்து கொண்டிருந்தார்கள். அன்ஸார்களின் கஸ்ரஜ் கோத்திரமான பனூ அவ்ஃப் பின் ஹஸ்ரஜ் குடும்பத்தின் தலைவராக அன்னார் இருந்தார்கள். அக்கோத்திரம் கவாக்கில் என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தது.


**திருக்குர்ஆனிலிருந்து...**

விரும்பப்படுகின்ற பொருள்களாகிய பெண்கள், ஆண் மக்கள், பாதுகாக்கப்பட்ட பொன் வெள்ளிகளின் கருவூலங்கள், அழகுவாய்ந்த குதிரைகள், கால்நடைகள், வேளாண்மை ஆகியவற்றின் மீதுள்ள நேசம் மக்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. இது உலக வாழ்க்கைக்குத் தேவையான பொருளாகும். அல்லாஹ்விடத்திலோ மிகவும் மேலான தங்குமிடமுள்ளது. (3:15)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

எங்கள் இறைவா! நிச்சயமாக நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே நீ எங்களுக்கு எங்கள் பாவங்களை மன்னித்தருள்வாயாக; எங்களை நரகத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக (3:17)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

கவ்க்கல் என்ற பெயர் சூட்டப்பட்டதன் காரணம் என்னவென்றால், மதீனாவில் ஒரு தலைவரிடத்தில் ஒரு நபர் அடைக்கலம் பெறுவதாக இருந்தால் அவரிடம் இவ்வாறு கூறப்படும். அதாவது இந்த மலையின் மீது உமது விருப்பப்படி நீர் ஏறுவீராக. இப்போது நீர் பாதுகாப்பில் உள்ளீர். அதாவது உமக்கு எந்த கஷ்டமும் இருக்காது. எங்கு எப்படி நீர் விரும்புகின்றீரோ அப்படி செல்லலாம். உமக்கு எந்த அச்சமும் இல்லை. ஆக, அடைக்கலம் வழங்கக்கூடியவர்கள் கவாக்கிலா என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள்.

இப்னு ஹிஷாம் கூறுகின்றார்கள்: இதுபோன்ற தலைவர்கள் ஒருவருக்கு அடைக்கலம் வழங்கும்போது அந்த நபரிடம் ஓர் அம்பு ஒன்றைக் கொடுத்து இந்த அம்புடன் நீர் விரும்பிய இடத்திற்கு செல்லலாம் என்று கூறி விடுவார்கள்.

ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களின் பாட்டனார் சஃலபா பின் தாதா பின் தாது அவர்களை கவ்க்கல் என்று கூறப்பட்டது. அதே போன்று ஹஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரான கனம் பின் அவ்ஃப் அவர்களையும் கவாக்கிலா என்று அழைக்கப்பட்டது. அதே போன்று ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களும் கவ்க்கல் என்ற சுட்டுப் பெயரால் மிகவும் பிரபல்யமடைந்திருந்தார்கள். பனூ சாலிம், பனூ கனம், பனூ அவ்ஃப் ஆகிய கோத்திரங்கள் கவாக்கிலா என்று அழைக்கப்பட்டிருந்தது. பனூ அவ்ஃப் கோத்திரத்தின் தலைவராக ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 158,159 உபாதா பின் சாமித் – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅது தொகுதி 3 பக்கம் 414 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் பக்கம் 309 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாஜுல் உரூஸ் தொகுதி 15 பக்கம் 627... – 1994 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களின் ஒரு மகனின் பெயர் வலீது ஆகும். அவர்களின் தாயார் பெயர் ஜமீலா பின்த் அபூ சஃஸா ஆகும். இரண்டாவது மகனின் பெயர் முஹம்மது ஆகும். அவரின் தாயார் பெயர் ஹஸ்ரத் உம்மே ஹராம் பின் முல்ஹான் ஆகும். ஹஸ்ரத் அவ்ஸ் பின் சாமத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களின் சகோதரராக இருந்தார்கள். ஹஸ்ரத் அவஸ் அவர்களும் பத்ரி சஹாபியாக இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 280,281 உபாதா பின் சாமித் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ ஸத் கனவி ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு ஹஸ்ரத் உபாதா அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்து போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றுள்ளார்கள். ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 34 ஆம் ஆண்டு பாலஸ்தீனின் ரமலா என்ற இடத்தில் மரணமடைந்தார்கள். அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அன்னாரின் மண்ணறை இன்றும் அங்கு உள்ளது.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களின் மரணம் கப்ரஸ் என்ற இடத்தில் நடந்தது. அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சார்பாக அந்த இடத்திற்கு கவர்னராக நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தார்கள். மரணத்தின் போது அன்னாருக்கு வயது 72 ஆக இருந்தது. உயரமான மனிதராகவும், மிக அழகிய மனிதராகவும் அன்னார் இருந்தார்கள். இன்னும் சிலரைப் பொறுத்தவரை அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 45 வது ஆண்டு அமீர் முஆவிய்யாவின் காலகட்டத்தில் நிகழ்ந்தது என்று கூறுகின்றனர். ஆனால் முந்தைய கூற்றுதான் மிகவும் சரியாக உள்ளது. அதில் அன்னார் ஹிஜ்ரி 34 வது ஆண்டு பாலஸ்தீனில் மரணமடைந்தார்கள் என்று வந்துள்ளது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 55,56 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 355 உபாதா பின் சாமித் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி) அவர்கள் அறிவித்த 181 அறிவிப்புகள் நமக்கு கிடைத்துள்ளன. பல்வேறு தரப்பட்ட அறிவிப்புகளாகும். அந்த அறிவிப்பை செய்யக் கூடியவர்களில் மாபெரும் சஹாபாக்களும், தாபியீன்களும் அடங்குவர். அந்த வரிசையில் ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி), ஹஸ்ரத் ஜாபின் பின் அப்தில்லாஹ் (ரலி), ஹஸ்ரத் முகாதம் பின் மாதி கர்ப் (ரலி) ஆகியோரும் அடங்குவர்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 405 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள். உத்பா நாளன்று இரவில் அங்கிருந்த தலைவர்களில் அன்னாரும் ஒரு தலைவராக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சுற்றி நபித்தோழர்களின் கூட்டம் ஒன்று இருந்தது. அப்போது அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வுக்கு நாங்கள் யாரையும் இணையாக்க மாட்டோம். திருட மாட்டோம். பிள்ளைகளை கொலை செய்ய மாட்டோம். அறிந்தோ அறியாமலோ எவர் மீதும் பழிசுமத்த மாட்டோம். மேலும் நல்ல விஷயங்களில் உங்களுக்கு கட்டுப்படாமல் இருக்க மாட்டோம் என என்னிடம் பைஅத் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

### திருக்குர்ஆனிலிருந்து...

வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறெவருமில்லை என்று அல்லாஹ் நீதியில் நிலைத்தவனாய் சாட்சி கூறுகின்றான். அவ்வாறே வானவர்களும், அறிவுடையோரும் (சாட்சி கூறுகின்றனர்). வல்லமையுள்ளவனும், நுட்பமான ஞானம் உள்ளவனுமாகிய அவனைத்தவிர வேறு எவரும் வணக்கத்திற்குரியவன் இல்லை. (3:19)

S.S.H.Muhammed Lebbai (Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

இறைச்சட்டத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டவர்களைப் பற்றி உமக்குத் தெரியாதா? அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ்வின் வேதத்தின்பால் அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அவர்களுள் ஒரு பிரிவினர் புறக்கணித்து முகந்திருப்பிக் கொள்கின்றனர். (3:24)

M.Sabahul Islam & Mohaideen Ali (Melapalayam)

எனவே உங்களில் எவர் இந்த உடன்படிக்கையை முழுமை செய்வாரோ அவருக்குரிய கூலி அல்லாஹ்விடம் உள்ளது. எவர் இந்த தீமைகளில் ஒரு தீமையை செய்தாரோ அவருக்கு உலகில் அதற்கான தண்டனை கிடைத்து விட்டால் அது அவருக்கு பரிகாரமாக அமைந்து விடும். எவர் ஒருவர் அத்தீமைகளில் ஒரு தீமையை செய்கின்றாரோ பின்னர் அல்லாஹ் அதனை திரையிட்டு மறைத்து விடுகின்றான் என்றால் பிறகு அவரது விவகாரம் அல்லாஹ்விடத்தில் உள்ளது. அல்லாஹ் விரும்பினால் அவரை மன்னிக்கலாம். அல்லாஹ் விரும்பினால் அவரை தண்டிக்கலாம். நாங்கள் இவ்விஷயங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் பைஅத் செய்தோம் என்று அந்த சஹாபி கூறுகின்றார். இது புகாரியில் வருகின்ற அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஈமான்... ஹதீஸ் எண் 18)

மதீனா ஹிஜ்ரத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குபா என்ற இடத்தில் ஜுமுஆ தொழுகையை தொழுதார்கள். மேலும் ஜுமுஆ தொழுத பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவை நோக்கிச் செல்வதற்காக தனது ஒட்டகத்தின் மீது அமர்ந்து அதனை செலுத்தத் தொடங்கினார்கள். அன்னார் கயிற்றை விட்டு விட்டார்கள்.

எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை. ஒட்டகமோ வலப்பக்கமும், இடப்பக்கமும் பார்க்கத் தொடங்கியது. நான் எங்கே செல்வது என அது யோசித்துக் கொண்டிருந்தது போன்று அது இருந்தது. மேலும் எந்த திசையை நோக்கி செல்வது என்பதை அது தீர்மானித்துக் கொண்டிருந்தது. இவ்வாறு அது நின்று கொண்டிருந்தது. இடப்பக்கமும், வலப்பக்கமும் அது பார்த்துக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட பனூ சாலிம் கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் அவர்களின் ஊரில்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றி இருந்தார்கள்.

அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு கேள்வி ஒன்றை வைத்தார்கள். அவர்களில் உத்பா பின் மாலிக் மற்றும் நஃவ்பல் பின் அப்துல்லாஹ் பின் மாலிக் மற்றும் உபாதா பின் சாமத் ஆகியோரும் இருந்தனர்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எங்களுடைய ஊரில் தங்குங்கள் என்று அவர்கள் கூறினர். மேலும் இங்கு மக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இங்கு கண்ணியம் மற்றும் பாதுகாப்பும் முழுமையாகவும் உள்ளது. நாங்கள் முழுமையாக உங்களை கண்ணிப்படுத்துவோம். மேலும் பாதுகாக்கவும் செய்வோம். மேலும் இங்குதான் அதிகமாக முஸ்லிம்கள் இருக்கின்றனர் என்று அவர்கள் என்று கூறினார்கள்.

மற்றுமொரு அறிவிப்பில் இந்த சொற்களும் இடம் பெற்றுள்ளன. அதாவது இங்கு செல்வமும், ஆதிக்கமும் அதிகமாக உள்ளது. நாங்கள் அதிகமான வசதி வாய்ப்பு உடையவர்களாக உள்ளோம். மேலும் எங்களிடம் பணமும் உள்ளது.

மற்றுமொரு அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. அதாவது எங்களது கோத்திரம் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளது. மேலும் எங்களிடம் ஆயுதங்களும் உள்ளன. மேலும் எங்களிடத்தில் தோட்டங்களும், வாழ்க்கைக்கு தேவையான அனைத்து வசதி வாய்ப்புகளும் உள்ளன என அம்மக்கள் கூறினர். அதாவது எங்களால் உங்களை பாதுகாக்கவும் முடியும். பொருளாதார உதவி ஒத்தாசைகளையும் எங்களால் செய்ய முடியும்.

தொடர்ந்து அவர்கள் கூறினர். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எவராவது ஒருவர் இந்த பகுதியில் துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகி இந்தப் பகுதிக்கு வந்து விட்டால் அவர் எங்களுடைய இடத்தில்தான் வந்து அடைக்கலம் வேண்டுவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் அனைத்து கூற்றுக்களையும் செவிமடுத்தார்கள். அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். மேலும் உங்களுடைய கூற்றுக்கள் அனைத்தும் இருக்கட்டும். அது சரிதான். ஆனால் ஒட்டகத்திற்கு வழியை விட்டு விடுங்கள். ஏனென்றால் இது அல்லாஹ்வின் புறமிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த ஒட்டகம் அல்லாஹ்வின் கட்டளைகளின்படியே எங்கு செல்ல வேண்டுமோ அங்கு செல்லும். எங்கு தங்க வேண்டுமோ அங்கு அமர்ந்து விடும் என்று கூறினார்கள்.

மற்றுமொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த ஒட்டகம் அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டுள்ளது. எனவே அதற்குரிய வழியை விட்டு விடுங்கள். மேலும் நீங்கள் முன் வைத்த விஷயங்களில் அல்லாஹ் உங்கள் மீது பரக்கத் செய்வானாக என்று சிரித்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 83... – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எகிப்து வெற்றி தொடர்பாக சீரத்துஸ் சஹாபா என்ற நூலின் ஆசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்: ஃபாரூக்கி கிலாஃபத்தின்போது எகிப்து வெற்றி கொள்ளப்படுவதில் தாமதமானது. அப்போது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மேலும் உதவி தேவை என கடிதம் ஒன்றை எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 4000 நபர்களைக் கொண்ட படையை அனுப்பி வைத்தார்கள். அதில் ஓராயிரம் நபர்களைக் கொண்ட படைக்கு தலைவராக ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் இருந்தார்கள். இந்த அதிகாரிகளில் ஒவ்வொரு நபரும் ஆயிரம் நபர்களுக்கு சமமாவார் என ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது பதில் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்த படை எகிப்தை சென்றடைந்தது. அப்போது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மொத்த படையையும் ஒன்றுகூட்டி தாக்கமிகு சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்கள். மேலும் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களை அழைத்து உங்களது அம்பை எனக்குத் தாருங்கள் என்று கூறி ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் தமது தலைப்பாகையை அவிழ்த்து அதன் மீது அந்த அம்பை வைத்து உபாதா அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். மேலும் இது படைத்தளபதிகளின் கொடியாகும். இன்று நீங்கள் படைத் தளபதி ஆவீர்கள் என்றும் அன்னார் கூறினார்கள். முதல் தாக்குதலிலேயே நகரம் வெற்றி கொள்ளப்பட்டது. இது இறைவனின் மகிமையாகும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒவ்வொரு மனிதனும் தான் செய்த நன்மையையும், தான் செய்த தீமையையும் நேருக்கு நேர் காணும் நாளுக்கு அஞ்சுங்கள். (தீமையாகிய) இதற்கும், தனக்குமிடையே நெடுந்தூரம் இருக்க வேண்டுமென அவன் விரும்புவான். அல்லாஹ் தனது தண்டனையைப் பற்றி உங்களுக்கு எச்சரிக்கின்றான். அல்லாஹ் அடியார்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக இருக்கின்றான். (3:31)

Faizal Hameed Ilahi (Tittacherry)

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 402 – 2004 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் (ரலி) அவர்கள் ஃபாலஸ்தீனம் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு ஹம்ஸ் என்ற இடத்திற்கு வந்தார்கள். உள்ளூர் வாசிகள் அன்னாரிடம் உடன்படிக்கை செய்திருந்தார்கள். அதன் பிறகு அன்னார் ஹஸ்ரத் உபாதா பின் சாமத் அன்ஸாரி சஹாபியை ஹமஸ் நகரத்தின் கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

பின்னர் சுயமே அன்னார் ஜமா என்ற இடத்தை நோக்கிச் சென்றார்கள். ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி) அவர்கள் பிற்காலத்தில் லாஸிகிய்யா என்ற ஊருக்கும் இடம் பெயர்ந்து சென்றார்கள். அது சிரியா நாட்டில் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்த ஒரு நகரமாகும். அங்கிருந்த உள்ளூர்வாசிகள் முஸ்லிம்களிடம் போர் செய்தனர். அங்கு ஒரு மாபெரும் கதவு ஒன்று இருந்தது. அது ஜமாஅத்தின் மாபெரும் கூட்டம் ஒன்று வந்தால் தான் திறக்கும். இல்லையென்றால் திறக்காது.

ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் படையை நகரத்திலிருந்து தொலைவில் கொண்டு சென்று விட்டார்கள். மேலும் ஒரு குதிரையும் அதனுடன் ஒரு மனிதரும் ஒளிந்து கொள்ளும் வகையில் அங்கு அகழ்களை தோண்டுமாறு அன்னார் முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார்கள்.

ஆழமான அகழ்கள் தோண்டப்பட்டன. அகழ் தோண்டுவதில் முஸ்லிம்கள் கடும் முயற்சி செய்தனர். பணி முடிந்ததும் பகலின் வெளிச்சத்தில் ஹமஸ் என்ற நகரத்திற்கு அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள். இரவு வந்ததும் தாங்கள் தோண்டிய அந்த அகழிற்கு முஸ்லிம்கள் வந்து விடுவர். அல் அஸ்கிய்யா நகரத்து வாசிகள் முஸ்லிம்கள் இடத்தை விட்டு சென்று விட்டதாக கருதிக் கொண்டனர்.

எனவே அகழ் முடிந்ததும் அவர்கள் தங்களது கதவுகளை திறந்தார்கள். மேலும் தங்களது விலங்குகளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். முஸ்லிம்கள் திடீரென வெளியே வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் அஸ்கிய்யா வாசிகள் மிரண்டு விட்டனர். முஸ்லிம்கள் அவர்கள் மீது போர் தொடுத்தனர். மேலும் இந்த கதவின் வழியாக நகரத்திற்குள் நுழைந்தனர். இவ்வாறு அந்த நகரத்தை வெற்றி கொண்டனர்.

ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் கோட்டைக்குள் நுழைந்தார்கள். அதன் சுவர்களுக்கு மேல் ஏறி தக்பீர் முழக்கம் இட்டார்கள். லாஸிகிய்யாவைச் சேர்ந்த நஸராக்களில் ஒரு சமுதாயம் யஸீது நகரத்தை நோக்கி ஓடி விட்டது. பின்னர் அவர்களின் நிலம் அவர்கள் திரும்பி வருவதற்கு ஏதுவாக திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அடைக்கலம் வேண்டினார்கள். முதலில் அச்சத்தின் காரணமாக அவர்கள் ஓடி விட்டனர். ஆனால் பின்னர் அவர்கள் நாங்கள் திரும்பி வர விரும்புகின்றோம். எனவே எங்களுக்கு அடைக்கலம் தாருங்கள் என வேண்டினர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக, (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான். (3:32)

M.Y. Shahul Hameed (Melapalayam)

எனவே அவர்களின் நிலம் அவர்களுக்கு திரும்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் விளைச்சலில் ஒரு பங்கு வரியாக கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இவ்வாறு அவர்களுக்குரிய நிலம் அவர்களுக்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர்களுக்குரிய வணக்கஸ்தலம் அவர்களிடேமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. எங்கு அவர்கள் இறைவணக்கம் செலுத்தி வந்தார்களோ அது அவர்களுக்கு திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் நீங்கள் எவ்வாறு இறைவணக்கம் செய்து வந்தீர்களோ அவ்வாறே செய்து கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது.

முஸ்லிம்கள் லாஸிகிய்யாவில் நகரத்தில் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களின் கட்டளையின் பெயரில் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினார்கள். அது பிற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது. ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் மற்றும் ஏனைய முஸ்லிம்கள் கடற்கரை ஓரம் சென்றடைந்தார்கள். மேலும் பலதா என்ற ஒரு நகரத்தை வெற்றி கொண்டார்கள். அந்நகரம் ஆறு மைல் தொலைவில் இருந்தது.

ஹஸ்ரத் உபாதா (ரலி) மற்றும் அவர்களுடைய ஏனைய நண்பர்களில் பலர் இஸ்லாமிய வெற்றிகளில் முக்கிய பங்காற்றினர். அவர்களின் மூலமாக ஏன்த்தர தூஸ் வெற்றி கொள்ளப்பட்டது. அது சிரியாவின் நாடாகும். மேலும் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். அதேபோன்று பின்னர் சிரியா நாட்டின் பகுதியான லாஸிகிய்யா, பலதா, ஏன்த்தர தூஸ் ஆகிய இடங்களும் ஹஸ்ரத் உபாதா பின் சாமத் அவர்களின் கரங்களால் வெற்றி கொள்ளப்பட்டது.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 169 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சதகாக்களை வசூல் செய்வதற்காக அன்னாரை நியமனம் செய்தார்கள். மேலும் அல்லாஹ்விற்கு அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அறிவுரை செய்தார்கள். கியாமத் நாளன்று ஒட்டகத்தை நீங்கள் சுமப்பவராகவும், அல்லது பசுமாட்டை நீங்கள் சுமப்பவராகவும் ஆகி விடாதீர்கள். ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்து விடாதீர்கள். மேலும் தான தர்மங்களை சரியான முறையில் பாதுகாக்க முடியாதவராகவும் நீங்கள் ஆகி விடாதீர்கள் என்று கூறினார்கள்.

அக்காலத்தில் சதகாக்கள் ஒட்டகங்களாகவும், மாடுகளாகவும், ஆடுகளாகவும் தான் வழங்கப்பட்டு வந்தன. தான தர்மங்களை சரியான முறையில் பங்கிடுபவர்களாகவும், அதனை சரியான முறையில் பாதுகாப்பவராகவும் நீங்கள் இல்லையென்றால் கியாமத் நாளன்று உங்கள் மீது அதன் சுமை சுமத்தப்படும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி) அவர்கள் இதனைக் கேட்டு விட்டு கூறினார்கள்: எந்த இறைவன் உங்களை உண்மையுடன் அனுப்பினானோ அவன் மீது ஆணையாக! என்னால் இரண்டு நபர்களுக்கு கூட அதிகாரியாக இருக்க முடியாது. எனது நிலை என்னவென்றால், என்னால் எவருடைய சுமையையும் சுமக்க

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

முடியாது. எனவே என்னை நீங்கள் அந்தப் பொறுப்புக்கு நியமிக்காமல் இருந்தால் நன்றாக இருக்கும் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அன்ஸார்களில் ஐந்து நபர்கள் திருக்குர்ஆனை ஒன்று திரட்டினார்கள். அவர்களின் பெயர் இவ்வாறாகும்: ஹஸ்ரத் மஅஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் உபாதா பின் சாமத் (ரலி), ஹஸ்ரத் அதீ பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) ஆகியோர் ஆவர்.

ஹஸ்ரத் யஸீது பின் சுஃப்யான் அவர்கள் சிரியா வெற்றி கொள்ளப்பட்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: அதாவது சிரியாவாசிகளுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்கக்கூடிய மற்றும் மார்க்கத்தைப் பற்றி சரியான போதனைகளை வழங்கக்கூடிய ஓர் ஆசிரியரின் தேவை உள்ளது.

எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஅஸ் (ரலி), ஹஸ்ரத் உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) ஆகியோரை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் பாலஸ்தீனத்தில் சென்று தங்கினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 55 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜனாதா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களிடத்தில் சென்றேன். அவர்களுக்கு அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பற்றி நல்ல புரிதல் உள்ளது என்பதை நான் கண்டு கொண்டேன். அதாவது அன்னார் மிகவும் ஞானம்படைத்தவராக இருந்தார்கள்.

(அல்அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 507 உபாதா பின் சாமித் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்கள் சிரியா நாட்டை வெற்றி கொண்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபாதா (ரலி) மற்றும் அவர்களின் தோழர்களான ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) ஆகியோரை சிரியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அங்கு சென்று மக்களுக்கு திருக்குர்ஆன் போதனைகளை வழங்க வேண்டும். மேலும் மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று இவர்களை அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் ஹமஸ் என்ற இடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) அவர்கள் சிரியாவில் தங்கினார்கள். ஹஸ்ரத் மஅஸ் (ரலி) அவர்கள் பாலஸ்தீனத்தை சென்றடைந்தார்கள். சிறிது காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்களும் பாலஸ்தீன் சென்று விட்டார்கள். அங்கு ஒரு விவகாரத்தில் அமீர் முஆவிய்யா அவர்கள் எதிர்த்தார்கள். அதனை ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் விரும்பவில்லை. அதாவது மார்க்க விவகாரத்தில் ஏதோவொரு விஷயத்தில் கருத்து வேறுபாடு இருந்தது. அமீர் முஆவிய்யா அன்னாருடன் மிகக் கடினமாக பேசினார்கள்.

எனவே ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஒருபோதும் உங்களுடன் ஒரே இடத்தில் இருக்க மாட்டேன் என்று கூறி ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் மதீனாவிற்குச் சென்று விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உங்களை எந்த விஷயம் இங்கு கொண்டு வந்தது என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் இவ்வாறு கருத்து வேறுபாடு என முழுமையாக அந்த விஷயத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தெரிவித்தார்கள். மேலும் என்னுடன் முஆவிய்யா அவர்கள் கடினமாக நடந்து கொண்டார்கள் என்றும் கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் கருத்து வேறுபாட்டின் காரணமாக அன்னார் திரும்பி வந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்கள் இடத்திற்கு திரும்பிச் சென்று விடுங்கள். நீங்களோ, உங்களைப் போன்ற ஒருவரோ இல்லாத ஊரை அல்லாஹ் சீரழித்து விடுவான்.

அதாவது மார்க்க ஞானம் பெற்ற மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பழைய சஹாபாக்கள் நிச்சயம் அதுபோன்ற இடங்களில் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். இல்லையென்றால் அது அந்த ஊரின் துர்பாக்கியமாக அமையும். எனவே நீங்கள் திரும்பிச் செல்வது அவசியமாகும். மேலும் அமீர் முஆவிய்யாவிற்கும் இவ்வாறு கடிதம் அனுப்பினார்கள். அதாவது உங்களுக்கு ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் மீது எந்த அதிகாரமும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 55 உபாதா பின் சாமித் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

சில விவகாரங்களில் இவர் கூறுகின்ற விஷயங்களை செவிமடுங்கள். அன்னார் எதனைக் கூறுகின்றார்களோ அது சரியாகவே உள்ளது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உபாதா (ரலி) அவர்கள் தொடர்பாக இன்னும் ஏராளமான அறிவிப்புகள் உள்ளன. அதனை நான் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் குத்பாக்களில் எடுத்துரைப்பேன். ஏனென்றால் அவை அனைத்தும் நீண்ட நெடிய சம்வங்களாகும். அதற்கு நீண்ட நேரம் தேவைப்படும்.

இப்போது நான் மர்ஹூம் ஒருவரைப் பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். அன்னாரது ஜனாஸா தொழுகையையும் நான் தொழ வைப்பேன். அந்த ஜனாஸா இங்கு வந்துள்ளது. அது மதிப்பிற்குரிய தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஆகஸ்ட் மாதம் 26 ஆம் தேதி பொறுமையை சோதிக்கக்கூடிய நோயிற்குப் பிறகு இறை நியதிக்கேற்ப மரணமடைந்து விட்டார்கள். انّا للہ وانّا اِلَیہ راجعون

அன்னாருக்கு கேன்ஸர் நோயின் துன்பம் இருந்தது. அதனை அன்னார் மிகவும் பொறுமையுடன் அதன் வேதனைகளை சகித்துக் கொண்டார்கள். அன்னார் முதல்நிலை அதிகாரி ஆவார்கள். மிக உயர்தரமான ரேங்க் பெற்றிருந்தார்கள். அதன் பிறகு மிக உயர் பதவியில் இருந்த நிலையில் ஓய்வும் பெற்றார்கள். இன்றைய நாட்களில் அன்னார் ஃபஸ்லே உமர் பவுண்டேஷனின் தலைவராக இருந்து வந்தார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அன்னார் நான் அந்த பொறுப்பில் அமர்த்தியிருந்தேன். அன்னார் மார்க்கத் தொண்டுகளை ஆற்றி வந்தார்கள்.

மதிப்பிற்குரிய தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்கள் 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி பிறந்தார்கள். அடிப்படையில் அன்னாரது குடும்பம் சியால்கோட்டைச் சேர்ந்ததாக இருந்தது. ஆனால் பிற்காலத்தில் சர்ஹோதா என்ற ஊரில் வந்து வசிக்கத் தொடங்கினார்கள். மதிப்பிற்குரிய தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களின் தந்தையார் முபல்லிக்காக இருந்தார்கள். மதிப்பிற்குரி சவுத்ரி முஹம்மது ஆரிஃப் சாஹிப் இங்கிலாந்து நாட்டின் முபல்லிக்காக தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றார்கள். மேலும்

லண்டன் பள்ளிவாசலின் நாயிப் இமாமாகவும் இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் முஹம்மது ஆரிஃப் சாஹிப் அவர்கள் நாயிப் வகீலுத் தஃப்ஸீராக ரப்வாவில் இருந்தார்கள்.

இவ்வாறு மவ்லானா முஹம்மது யாரே ஆரிஃப் சாஹிப் ஜமாஅத்தின் பெரும் ஆலிம்களில் ஒருவராக இருந்தார்கள். 1940 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி பாகிஸ்தான் தீர்மானம் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதில் மவ்லானா அப்துர் ரஹீம் சாஹிப் நய்யர் அவர்களுடன் ஜமாஅத்தின் பிரதிநிதியாக தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களும் பங்கு பெற்றார்கள். அதாவது தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களின் தந்தையும் இவரும் பங்கு பெற்றார்கள்.

எவ்வாறிருப்பினும் இதுவொரு வரலாற்று நற்பாக்கியமாகும். தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களின் தாயாரின் பெயர் மதிப்பிற்குரிய இனாயத் சுரைய்யா பேகம் சாஹிபா ஆகும். அன்னாரின் பாட்டனார் சவுத்ரி குலாம் ஹுஸைன் பட்டி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். தாஹிர் ஆரிஃப் சாஹிப் மிகவும் அறிவார்ந்த மற்றும் ஆர்வமுடைய நபராக இருந்து வந்தார்கள். தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்கள் இலக்கியவாதியாகவும், கவிஞராகவும் இருந்தார்கள். பல புத்தகங்களும் அன்னார் எழுதியுள்ளார்கள்.

அன்னாரது இரண்டு கவிதைத் தொகுப்புகள் மிகவும் பிரபல்யமாகும். ஒன்று உருதுவிலும், மற்றொன்று பஞ்சாபியிலும் இருக்கிறது. அது மட்டுமின்றி இன்னும் பல நல்ல புத்தகங்கள் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரில் ஒரு புத்தகத்தை அன்னார் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள். பாகிஸ்தான் கட்டம் கட்டமாக என்ற தலைப்பில் புத்தகம் எழுதினார்கள்.

பஞ்சாப் பல்கலைக்கழகத்திலிருந்து MA econmics பட்டம் பெற்றார்கள். பின்னர் அங்கேயே LLB பட்டம் பெற்றார்கள். பின்னர் அங்கிருந்து உயர் தரமான கல்வியைப் பெறுவதற்காக இங்கிலாந்து வந்தார்கள். லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸில் LLM டிகிரியை முடித்தார்கள். மேலும் இறையருளால் லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Mark of merit ல் நல்ல தக்க இடம் கிடைத்தது.

லண்டனில் கல்வி பயின்ற பிறகு பாகிஸ்தான் திரும்பிச் சென்றார்கள். அங்கு அவர்கள் Css என்ற தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். பாகிஸ்தானில் சிவிர் சர்வீஸ் துறையில் ஈடுபட்டார்கள். அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றமடைந்து முன்னேற்றமடைந்து இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அதாவது IG என்ற உயர் பதவியை அடைந்தார்கள். நமக்கு எதிரான சட்டங்களும் சூழல்களும் பாகிஸ்தானில் இருந்த சமயத்தில் அவர்கள் இந்த உயர்ந்த இடத்தை அடைந்தார்கள். நிச்சயமாக இது அன்னாரின் அசாதாரணமான ஆற்றல்களை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. பாகிஸ்தான் போலீஸ் மட்டுமின்றி FIA மற்றும் இமிகிரேஷன் இன்டலிஜன்ஸ் பீரோ துறையிலும் அன்னார் பணியமர்த்தப்பட்டார்கள்.

அன்னார் கல்வி பயில்வதற்காக இங்கிலாந்து வந்து தங்கியிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப சவுத்ரி ரஷீது சாஹிப் அவர்கள் சிறுவர்களுக்கான புத்தகம் ஒன்றை எழுதினார்கள். ஆங்கில மொழியில் அந்த புத்தகத்தை எழுதுவதில் தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்கள் அன்னாருக்கு உதவி செய்யும் நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். மேலும் அன்னார் ஏராளமான தொண்டுகளையும் ஆற்றினார்கள். அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களைப் படிப்பதற்கு அன்னாருக்கு ஆர்வம் மிகுதியாக இருந்தது. ஏதாவதொரு புத்தகத்தை அன்னார் எப்போதும் படித்து வந்தார்கள். படிப்பது மட்டுமின்றி அதிலிருந்து குறிப்பையும் அன்னார் எடுப்பார்கள். புத்தகங்களிலுள்ள விஷயம் மற்றும் கட்டுரைகள் தொடர்பாக தமது நண்பர்களிடம் கலந்துரையாடுவார்கள். மிகவும் முறையாக திருக்குர்ஆன் ஓதக் கூடியவராகவும் அதனை சீர்தூக்கிப் பார்க்கக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள்.

அவர்களின் உறவினர்களிலிருந்து ஒருவர் அல்ல; வேறு யாரோ எனக்கு இதனை எழுதியுள்ளார்: ஒரு முறை நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு விஷயம் கூறப்பட்டது. அதிலிருந்து அன்னார் முறையாக தஹஜ்ஜுத் நேரத்தில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள் என்பது எனக்குத் தெரிய வந்தது. பாகிஸ்தானில் எங்கெல்லாம் ஊழியம் செய்தார்களோ அங்கு எப்போதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் ஆஜராகி வந்தார்கள். மிகவும் தைரியசாலியான மனிதராக இருந்தார்கள்.

இறைவனது அருளால் நான் ஏற்கனவே கூறியதுபோன்று அன்னார் படித்திருந்தார்கள். அன்னார் மிகவும் புத்திசாலியாகவும் இருந்தார்கள். மார்க்க அறிவும் பெற்றிருந்தார்கள். உலக அறிவையும் பெற்றிருந்தார்கள். அதனை ஜமாஅத்திற்காக நல்ல வகையில் பயன்படுத்திக் கொண்டார்கள். சில விவகாரங்களில் தனிப்பட்ட கருத்துக்களை கொண்டிருந்தார்கள். மேலும் நல்ல ஆலோசனைகளை கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக தன்மானம் கொண்டவர்களாக இருந்தார்கள். மிகவும் தைரியமான அஹ்மதியாகவும் இருந்தார்கள். அஹ்மதிய்யா கிலாஃபத்தின் உதவியாளராக இருந்து வர வேண்டும் என்பதில் தமது முழு வாழ்நாளையும் கழித்தார்கள். மேலும் நன்றியுள்ள ஜமாஅத்தின் தொண்டராக தமது வாழ்க்கையை கழித்தார்கள். அல்லாஹ்வின் அருளால் நான் பார்த்துள்ளேன். அன்னாரின் இந்த முயற்சியில் அல்லாஹ் அன்னாருக்கு வெற்றியை வழங்கினான்.

அன்னார் குழந்தைப் பருவம் முதல் எனது வகுப்புத் தோழர் ஆவார்கள். குழந்தைப் பருவம் முதல் அன்னாரை நான் அறிவேன். அல்லாஹ்வின் அருளால் கல்வி பயில வேண்டும் என்பதில் அன்னாருக்கு அதிக ஆர்வம் இருந்தது. அன்னார் நல்ல வாதம் செய்யக் கூடியவராக இருந்தார்கள். கல்லூரியில் பல்வேறு விவாதங்களில் பங்கு பெற்று வந்தார்கள். நல்ல சொற்பொழிவாளராகவும் இருந்துள்ளார்கள். அப்போதும் நான் பார்த்துள்ளேன். அன்னாருக்கு போதுமான மார்க்க ஞானம் இருந்தது.

மேலும் இந்த விஷயமும் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது அன்னார் ஜமாஅத்தின் ஊழியர்களையும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களையும் சிறப்பாக கண்ணியப்படுத்தவும், அவர்கள் மீது அன்பான உணர்வுகளைக் கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். அது மட்டுமின்றி அஹ்மதி நண்பர்களுக்கு ஆகுமான உதவிகளைச் செய்ய எந்நேரமும் ஆயத்தமாக இருந்தார்கள். பெரிய பொறுப்பில் இருந்தார்கள். அந்த வகையில் தமது அஹ்மதிகளுக்கு என்ன ஆகுமான உதவிகளைச் செய்ய முடியுமோ அதற்காக முடிந்த வரை முயற்சி செய்தார்கள்.

ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனில் அன்னாருடைய தொண்டு 2014 ஆம் ஆண்டு ஆரம்பமானது. நான் அப்போது அவர்களை டைரக்டர் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனாக நியமித்தேன். பின்னர் 2017 ஆம் ஆண்டு சவுத்ரி ஹமீது நஸ்ருல்லாஹ் சாஹிப் அவர்கள் சத்ர் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷாக இருந்து வந்தார்கள். அன்னாரின் மரணத்திற்குப் பிறகு நான் தாஹிர் ஆரிஃப் சாஹிப்

அவர்களை சத்ர் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனாக நியமனம் செய்தேன். அல்லாஹ்வின் அருளால் நான் ஏற்கனவே கூறியது போன்று அன்னார் மரணம் வரை சத்ர் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனாக தொண்டாற்றினார்கள். அதாவது இங்கிலாந்திற்கு சிகிச்சைக்காக வரும் வரை மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு வரை அன்னார் மிகவும் கடின உழைப்புடன் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் துறையின் பணிகளை செய்து வந்தார்கள். அனைத்து கூட்டங்களிலும் மிக ஆர்வமுடன் முறையாக கலந்து கொண்டார்கள். அன்னாரின் காலகட்டத்தில் அந்தத் துறையில் பணிகள் போதுமான அளவிற்கு விரிவடைந்துள்ளன.

அன்னார் தமது நினைவாக அனீஸா தாஹிரா சாஹிபா என்ற தமது மனைவியையும், இஸ்ஃபந்து யாரே ஆரிஃப் என்ற ஒரு மகனையும், தய்யிபா ஆரிஃப், அஸீஸா ஊஜ் மற்றும் பினா தாஹிர் ஆரிஃப் ஆகிய மகள்களையும் விட்டுவிட்டுச் சென்றுள்ளார்கள். மகள்களில் இருவருக்கு திருமணமாகி விட்டது. ஒரு மகனுக்கும் ஒரு மகளுக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை.

அன்னாரின் மகள் தய்யிபா ஆரிஃப் தாஹிர் சாஹிபா எழுதுகின்றார்கள்: எங்களது தந்தையார் மதிப்பிற்குரிய தாஹிர் ஆரிஃப் சாஹிப் மர்ஹூம் அவர்களுக்கு அல்லாஹ் எல்லையற்ற உலகியல் முன்னேற்றங்களை வழங்கினான். ஆனால் அன்னார் எப்போதும் அஹ்மதிய்யத்தின் அடையாளத்தை மிகத் துணிவுடனும் தன்மானத்துடனும் நிலைநாட்டி வந்தார்கள். மிகவும் நேர்மையான மற்றும் நம்பிக்கைக்குரிய அதிகாரியாக திகழ்ந்தார்கள்.

மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடிய அடியாராகவும், அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவராகவும், ஒரு எளிமையான மனிதராகவும் அன்னார் திகழ்ந்தார்கள். கவிஞராகவும், இலக்கியவாதியாகவும் இருந்தார்கள். உயர் தரமான நீதியை விரும்பக் கூடியவராகவும் இருந்தார்கள். ஆசிரியராகவும் இருந்தார்கள். மார்க்க ஞானத்தைப் பெற்றிருந்தார்கள். பொறுப்புமிக்க ஒரு கணவராக இருந்தார்கள். பரிவுமிக்க தந்தையாகவும் இருந்தார்கள். எல்லாவற்றையும் விட அன்னார் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் அன்பில் மூழ்கியவர்களாக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் அன்னாரை எப்போதும் நீதியை விரும்பக் கூடியவராகவும் மென்மையான இயல்பு படைத்தவராகவும் கண்டு வந்துள்ளேன் என எனது தாயார் கூறுகின்றார்கள். சிறியவர், பெரியவர், பணக்காரர், ஏழை என்ற எந்த பாகுபாடுமின்றி எல்லோருடனும் பதவிற்கு அப்பாற்பட்டவராக அழகிய முறையில் நடந்து வந்தார்கள்.

சில உறவினர்கள் உணர்ச்சிவசப்பட்டும் தமது தனிப்பட்ட தொடர்பின் காரணமாகவும் சிலவற்றை எழுதி விடுகின்றார்கள். ஆனால் மர்ஹூம் தொடர்பாக தற்போது என்ன எழுதப்பட்டுள்ளதோ அவை அனைத்தும் உண்மையாகும். ஏனென்றால் நான் தனிப்பட்ட முறையில் அன்னாரை நன்கு அறிவேன். உண்மையில் அன்னார் அப்படித்தான் இருந்தார்கள்.

முபாரக் சித்தீக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் தாஹிர் ஆரிஃப் சாஹிப் அவர்களின் இயல்பில் பணிவும் எளிமையும் இருந்தது. காலத்தின் கலீஃபாவின் மீது எல்லையற்ற அன்பும், கட்டுப்படுதலுக்கான உணர்வும் இருந்தது. மிக உயர்தரமான கவிஞராகவும், இலக்கியவாதியாகவும் அன்னார் இருந்தார்கள். நான் ஒரு முறை உங்களுடைய விருப்பத்திற்குரிய கவிதைகளைக் கூறுங்கள் எனக் கேட்டேன். அப்போது அன்னார், கிலாஃபத்தின் மீதான அன்பை பற்றி கூறுகின்ற தனது சில கவிதைகளை கூறினார்கள்.

*எஜமானரே உமது அடிமை உமக்கு அருகிலேயே இருக்க வேண்டும்*
*உமது பாதங்களிலேயே வசிக்க வேண்டும்*

ஒரு நாள் ஒரு நட்பு ரீதியிலான சபையில் நான் கூறினேன். தாஹிர் சாஹிப் ஒவ்வொரு அஹ்மதிக்கும் அல்லாஹ் ஏதாவதொரு வடிவில் மிகவும் கண்ணியத்தை வழங்கியுள்ளான். உங்களுக்கு காவல் துறையில் பெரும் பெரும் பதவிகள் கிடைத்துள்ளன என்று கூறினேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: இதையெல்லாம் விட எனக்கு கிடைத்த பெரும் பதவி என்னவென்றால் நான் அஹ்மதி ஆவேன். மேலும் நான் காலத்தின் கலீஃபாவின் வகுப்புத் தோழனாக இருந்துள்ளேன் என்று என்னுடன் படித்த அந்த விஷயத்தையும் பெருமைக்குரியதாக அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

அன்னாரின் தந்தையார் முஹம்மது யாரே ஆரிஃப் சாஹிப் கல்வி பயில்வதற்காக அன்னாரை ரப்வாவிற்கு அனுப்பி வைத்தார்கள். கல்லூரிக்கு அனுப்பினார்கள். அப்போது நமது காலேஜ் தேசியமயமாக ஆகியிருந்தது.

எனவே மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர்களிடத்தில் ஹாஸ்டலில் தங்குவதற்கு பகரமாக மாற்று ஏற்பாடு செய்யும்படி கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் மவ்லானா முஹம்மது யாரே ஆரிஃப் சாஹிப் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவே அன்னாருக்கு தாருல் ஜியாஃபத்தில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு தங்கி அன்னார் தமது படிப்பை முழுமை செய்தார்கள்.

மாணவ பருவத்தில் பல இயல்பான விஷயங்கள் பேசப்படுவதுண்டு. நகைச்சுவை விஷயங்களும் நடப்பதுண்டு. ஆனால் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் என்னை நாஸிர் ஆலாவாக நியமித்தது முதல் என்னுடன் மிக கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டார்கள். பின்னர் நான் கலீஃபாவான பிறகு கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வில் அன்னார் மேலும் முன்னேற்றம் அடைந்தார்கள். இது அல்லாஹ்வின் அருளால் நடந்தது.

அல்லாஹ் தஆலா அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளை முழுமையான நன்றியுணர்வுடன் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக வைப்பானாக. அன்னாரின் நண்பர்களும் அன்பர்களும் உறவினர்களும் எழுதியுள்ளார்கள். அந்த சம்பவங்களில் அவர்கள் அனைவரும் குறிப்பிட்ட விஷயம் என்னவென்றால், மர்ஹூம் மிக எளிமையான நபராகவும், பணிவுடைய நபராகவும் இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் ஞானம் படைத்த நபராகவும் அன்னார் இருந்தார்கள்.

இப்போது நான் தொழுகைகுப் பிறகு அன்னாரது ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். ஜனாஸா இங்கு வந்துள்ளது. நான் இங்கு தொழுகைக்குப் பிறகு வெளியில் சென்று ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ். நீங்கள் இங்க ஜனாஸா தொழுகைக்காக ஸஃப்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள். (இதனை) புறக்கணித்துத் திரும்பிவிட்டால், அல்லாஹ் நிராகரிப்பவர்களை ஒருபோதும் நேசிப்பதில்லை (என்பதனை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். (3:33)

A.Basheer Ahmad (Melapalayam)

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 03 Oct 2019 Issue No. 40

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

விடுகிறது. மனிதன் அவனால் முடிந்த அளவுக்கு அறிவைக் கற்றுக் கொண்டாலும் அல்லது தத்துவத்தின் ஆய்வில் மூழ்கி விட்டாலும் இறுதியில் அவன் எதுவுமே அறியாதவன் என்று உணர்ந்து கொள்கின்றான்.

நபிமொழியில் இவ்வாறு வருகிறது: எவ்வாறு ஒரு குருவி கடற்கரையோரத்தில் தண்ணீர் குடிப்பதற்காக தன்னுடைய வாயை நனைக்கிறதோ அதேபோன்றுதான் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வேதம் மற்றும் அவனுடைய செயலின் ஞானம் மற்றும் ரகசியங்களிலிருந்து பங்கு கிடைக்கின்றது.

அவ்வாறிருக்க ஒன்றுமற்ற மனிதன், ஆம் ஒன்றும் அறியாத தத்துவஞானி தன்னுடைய இந்த தற்பெருமையின் காரணத்தினால் எல்லாம் வல்ல இறைவனின் செயலான சந்திரன் பிளந்த அந்த சம்பவத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றான். மேலும் இந்த சம்பவத்தை இயற்கைக்கு மாற்றமானதாக கருதுகிறான். நாம் ஆட்சேபனை செய்ய வேண்டாம் என்று கூறவில்லை.

மாறாக, ஆட்சேபனை செய்யுங்கள். ஆரவாரமாக ஆட்சேபனை செய்யுங்கள். உள்ளத்தைத் திறந்தவாறு ஆட்சேபனை செய்யுங்கள். ஆனால் இரண்டு விஷயங்களை கருத்தில் கொள்ளுங்கள்.

முதலாவது இறைனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். இரண்டாவது பெரிய பெரிய தத்துவஞானிகள் இறுதியில் தாம் அறிவீனர்கள் என்பதை ஒப்புக் கொள்ளும் அளவிற்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அறிவின் உச்சக்கட்டம் எப்போதுமே அரியாமையில்தான் முடிகின்றது. உதாரணமாக, மருத்துவர்களிடம் நரம்பு மற்றும் வயிறு தொடர்பாக கேட்டால் அதை அவர்கள் நன்று அறிந்தும் புரிந்தும் இருப்பார்கள். ஆனால் ஒளியின் பிறப்பிடம் எது ? மற்றும் அதனுடைய மூலப்பொருள் என்ன? என்பதை கூறச் சொல்லுங்கள் பார்ப்போம். ஓசையின் பிறப்பிடம் எது? என்பதைக் கேட்டால் காதுகளில் உள்ள திரையின் மீது இவ்வாறு இருக்கும்; அவ்வாறு இருக்கும் என்று கூறுவார்கள். ஆனால் அது எவ்வாறு உருவாகின்றது என்பதை அவர்களால் ஒருபோதும் கூற முடியாது.

நெருப்பு ஏன் சூடாக இருக்கின்றது? நீர் ஏன் குளிர்ச்சியாக இருக்கின்றது என்ற கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க முடியாது. பொருள்களின் மூலக்கரு வரை சென்றடைவது எந்த ஒரு அறிஞரின் பணியோ அல்லது தத்துவஞானியின் பணியோ அல்ல.

பாருங்கள்! நம்முடைய உருவம் கண்ணாடியில் பிம்பமாக தெரிகின்றது. ஆனால் நம்முடைய தலை உடைந்து கண்ணாடிக்குள் செல்வதில்லை. நாமும் நலமாக இருக்கின்றோம். நம்முடைய முகம் கண்ணாடியின் உள்ளிலிருந்து தெரிகின்றது. ஆக, நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அதாவது சந்திரன் பிளந்தது, அது பிளந்ததன் காரணமாக உலக நியதியில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படக் கூடாது என்பதை எல்லாம் வல்ல அல்லாஹ் நன்கு அறிந்தவன் ஆவான்.

உண்மையான விஷயம் என்னவென்றால், இவை காரணிகளின் சிறப்பம்சமாகும். எவரால்தான் மல்லுக்கட்ட முடியும். எனவே எல்லாம் வல்ல இறைவனின் அற்புதங்கள் மற்றும் வல்லமையை நிராகரிப்பது மற்றும் நிராகரிப்பதில் வேகத்தைக் காட்டுவது அவசரக்காரர்கள் மற்றும் அறிவீனர்களின் பணியாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 76–78 – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

## கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமா

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 18,19,20 அக்டோபர் 2019 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய கிழமைகளில் நடத்துவதற்காக ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

## காதியானில் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் இன்ஷா அல்லாஹ்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் காதியானில் நடைபெறும் 125 –வது ஆண்டு மாநாடு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27, 28, 29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கும் காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad